# சிறார் சேகரித்த குட்டிக் கதைகள்...





தொகுப்பு - லிட்டில் சாம்பியன் பள்ளி (சி.பி.எஸ்.இ)
கல்லடிவிளை

# சிறார் சேகரித்த

# குட்டிக் கதைகள்...




தொகுப்பு : லிட்டில் சாம்பியன் பள்ளி (சி.பி.எஸ்.இ)

கல்லடிவிளை

**J.M.J.T.**
**Provincial Superior**
**(Congregation of Teresian Carmelites-CTC)**
**Amala Provincialate, Amalagam,**
**Pallividai Palam, Samayapuram-621 112, Trichy Dt, S.India.**



**சகோதரி அமலா CTC,**
மாநில தலைமை சகோதரி,
அமலா மறைமாநிலம், திருச்சி.

# வாழ்த்துரை



“மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் குரல் நெறி கருத்து

குழந்தைகளைச் சேம்பியன்களாக உருவாக்கம் செய்துகொண்டிருக்கும் பள்ளி நிர்வாகத்தை மனதார பாராட்டுகிறேன். குழந்தைகளின் ஒப்புவித்தல் கதைகளை கவுரவப்படுத்தி, சிறு நூலாக உருவாக்கி இருப்பது மழலைகள் மனதில் பசுமரத்தானி போல் பதிந்திருக்கும். படைப்பாற்றல் மழலைகளின் மனதில் நிறைந்து கிடக்கிறது. இது குழந்தைகளின்

உள்மனதில் உருவெடுக்கும் உணர்வுகளை உயிர்ப்பிக்கும்!
கற்பனை பெருக வைக்கும் கற்றலை உயர வைக்கும்!
சிந்தனையைப் பெருக வைக்கும் பாரெங்கும் புகழ வைக்கும்.

காகம் கற்களை அடுக்கி, தண்ணீரை உயரச் செய்து, நீர் பருகின கதையைப் பாட்டி சொன்னபோது, அப்படி அல்ல பாட்டி, அது அந்தக் காலம் ஸ்ட்ரா பயன்படுத்திக் குடித்திருந்தால் போதும் காலம் வீணாகப் போயிருக்காதே, என்று கூறுவது இந்தக் காலம் குழந்தையின் படைப்பாற்றல் இது.

மாணவர்களின் கதை கூறுதல் திறன், படைப்பாற்றலை ஊக்கு விக்கிறது. மழலைகள் காணும் மகிழ்வான செயலை உணர்வுபூர்வமாகச் சிந்திக்க வைக்கிறது. மொழி ஆளுமையை வளர்க்கிறது. மனதில் நல்லெண்ணங்கள் மலர செய்கிறது. சிந்திக்கும் ஆற்றலை வலுப் படுத்துகிறது.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்'' என்பதற்கேற்ப குழந்தைகளின் படைப்பாற்றல் திறன் வளர ஏணியாய் நல்தோணியாய் விளங்கும் ஆசிரிய உறவுகளை உள்ளபடியே உள்ளன்போடு மனதார வாழ்த்துகிறேன்.

இந்த ''சிறார் சேகரித்த குட்டிக் கதைகள் என்னும் நூல் தொகுப்பை உங்கள் கரங்களில் தவழவிட்டு மகிழ்கிறேன்.

நன்றி.

அன்புடன்,

சகோதரி **அமலா CTC**

# தொகுப்புரை



கதைகளால் மனிதன் உருவாக்கப்பட்டவன். கதைகள் மனிதன் பின்பற்ற வேண்டிய அறத்தைக் கற்றுத் தருகிறது. வாழ்க்கையின் சிரமங்களைக் கடந்து செல்வதற்கு உதவுகிறது. கதைகள் அறியாதவர்கள் யாருமில்லை. நாம் கதை கேட்டு வளர்ந்தவர்கள். நாமே கதைகளாய் மாறிப்போனோம்.

குழந்தைகளுக்குக் கதைகள் கேட்கவும், சொல்லவும் பிடிக்கும். கதைகளைக் கேட்பது குழந்தைகளுக்கு இயல்பாகவே மகிழ்ச்சியை உண்டாக்கும். கதைகள் வாழ்க்கைச் சுழற்சியை இலகுவாக்கும். ரசிக்க வைக்கும். கதைகள் மூலமாக அவர்களின் படைப்பாற்றல், கற்பனைத்திறன் அபாரமாக வளர்கிறது. கதைகள் சொல்லும் குழந்தைகள் தாங்கள் சொல்ல நினைப்பதைச் சரியாக வெளிப்படுத்த கற்றுக்கொள்கிறார்கள். இதனால் குழந்தைகளின் மொழித் திறன், கற்பனை ஆற்றல், முடிவெடுக்கும் திறன் ஆகிய முக்கிய திறன்கள் வளர கதைகள் உதவுகின்றது. கதைகள் கேட்கவும், கேட்ட கதைகளைச் சொல்லவும் முற்படும் குழந்தைகள் படைப்பாளிகளாக மாறுவார்கள். கதைகளைக் கோர்வையாகவும், தைரியமாகவும் சொல்லும் குழந்தைகள் தன்னை ஒரு படைப்பாளிகளாக உணர ஆரம்பிப்பார்கள்.

குழந்தை வளர்ப்பில் கதை சொல்லுதல் பேராயுதம். அது புதிய வாசல்களைத் திறக்கும். குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகள் ஒவ்வொன்றும் அவர்களின் கனவுகளுக்கான விதைகள். கற்பனைகள் வித விதமாகப் பிறக்கும். கதை ஒரு நெருக்கத்தை உருவாக்கும். ஒரு நம்பிக்கையைக் கொடுக்கும்.

கதை கேட்டு வளர்ந்த குழந்தைகளின் மனவலிமை வேறு விதமானது. தாயை, தகப்பனை, தாத்தாவை, பாட்டியை, சகோதரனை, சகோதிரியை, நண்பனை, ஆசிரியரை, காகத்தை, யானையை, முயலை, தவளையை, எறும்பை, புறாவை, புள்ளி மான்களை, பூனையை, குரங்கை, கரடியை, சிங்கத்தை, கழுதையை, முதலையை, வெட்டுக்களியை, சுண்டெலியை, மானை, மீன்களை, நாய்க்குட்டியை, நரியை, சூரியனை,

நிலவை இப்படி ஒவ்வொன்றாய் பரவசமாய் உணர்வார்கள். குழந்தைகளே கதைகளாய் மாறிப்போவார்கள். புத்தக வாசிப்பு அப்போதே ஆரம்பித்து விடும்.

எம் பள்ளியில் இத்திறமைகளை எம் மாணக்கரிடம் வளர்ப்பதற்காகக் கதை கேட்டு வரச்சொன்னோம். பெற்றோரிடம் கதைகளைக் கேட்டு வந்து பகிர்ந்து கொண்டார்கள். அவர்கள் அவர்களுக்கே உரிய பாணியில் கதை சொன்னார்கள். சொன்ன விதம், உணர்வோடு பகிர்ந்த விதம், அழகாய், இயல்பாய் இருந்தது. இக்கதைகள் ஏற்கனவே தெரிந்ததுதான். புத்தகங்களில் உள்ளதுதான். அவர்கள் சொன்ன கதைகளை தொகுத்தோம். அவர்களின் புகைப்படங்களோடு இக்கதைகளை வெளியிடுகிறோம். இது அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்படுத்தும் இன்னும், இன்னும் கதை கேட்கத் தூண்டும், வாசிக்க வைக்கும். கற்பனையை வளர்க்கும். நாளை அவர்களும் எழுத்தாளர்களாக உருவாகுவார்கள் என்ற நம்பிக்கையோடு இச்சிறிய கதைப் புத்தகத்தைத் தொகுத்து வெளியிடுவதில் மகிழ்கின்றோம்.

**அருட்சகோதரி J. ஆன்டோ ரோஸ் CTC**



# முயல்களும் தவளைகளும்

பெ. ஆர்லின் ஜோஹானா
III "ஏ"



ஒரு காட்டில் முயல் கூட்டம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த முயல்கள் பச்சை பசேல் என இருந்த அந்தக் காட்டில் கிடைத்த உணவுகளை எல்லாம் உண்டு சந்தோசமாக வாழ்ந்து வந்தன. அவைகளுக்கு அங்குச் சாப்பிட உணவு சுலபமாக கிடைத்துக்கொண்டிருந்தது. திடீரென்று கோடைக்காலம் வந்தது. கோடைக்கால வெப்பம் அதிகமாக இருந்ததால் அங்குப் பச்சை பசேல் என இருந்த புற்கள் எல்லாம் கருகி பாலைவனம் போல் தோற்றம் அளித்தன. அந்த முயல்களுக்கு உணவு எதுவும் கிடைக்காமல் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தன. அக்காட்டில் வேட்டை நாய்களும் இருந்தன. அவைகள் முயல்களை வேட்டையாட புதர்களில் பதுங்கி காத்திருந்தன.

அந்த வேட்டை நாய்களைக் கண்டு இந்த முயல்கள் பொந்துக்குள்ளே ஒளிந்துகொண்டு வெளியே வர முடியாமல் தவித்துக்கொண்டு இருந்தன. உணவு இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டன. ‘‘எவ்வளவு நாள் தான் இப்படியே பொந்துக்குள் ஒளிந்து இருப்பது நாம் எதாவது செய்ய வேண்டும்’’ என்று எல்லா முயல்களும் கூடிப் பேசிக்கொண்டு இருந்தன. அப்பொழுது ஒரு முயல் சொன்னது ‘‘கடவுள் நம்மைப் பலவீனமாக படைத்துப் விட்டார். எல்லா விலங்குகளும் எதாவது பிரச்சனை வந்தால் தங்களைக் காப்பாற்றி கொள்ளும் அளவிற்குப் பலம் உடையதாக இருக்கின்றன. ஆனால் நாம் எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் பலவீனமாக இருக்கிறோம், கடவுள் நம்மை ஏன் இப்படிப் படைத்துவிட்டார்?’’ என்று குறை கூறிக் கொண்டே இருந்தது. அப்போது மற்றொரு முயல் சொன்னது என்னால் இதற்கு மேல் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. பசியினாலும் இந்த வேட்டை நாய்களைப் பார்த்தும் பயந்து ஒதுங்கி வாழ்வதை விட சாவதே மேல் நான் எதாவது ஒரு நதியில் சென்று விழுந்து விடுகிறேன். என்று சொன்னது. ‘‘நாம் அனைவரும் எது செய்தாலும் ஒன்றாகச் செய்ய வேண்டும். வாழ்ந்தால் ஒன்றாக வாழ்வோம்.

இல்லையா எல்லோரும் சேர்ந்து நதியில் விழுவோம்'', என்று நதியை நோக்கி புறப்பட்டுச் சென்றன. அந்த முயல்கள் எல்லாம் ஒரு நதிக் கரையை சென்றடைந்தன. அங்கே சில தவளைகள் நதிக் கரையில் இருந்தது. இந்தத் தவளைகள் எல்லாம் முயல்களைப் பார்த்து பயத்தில் ஒன்றன் பின் ஒன்றாக நதியில் குதித்தன. இதைப் பார்த்த முயல் கூட்டம் ஆச்சரியமாக நின்றது. ''இந்தத் தவளைகள் நம்மைப் பார்த்துப் பயந்து நீருக்குள் குதிக்கின்றன, நாம் நம்மைத் தான் இந்த உலகத்தில் பலவீனமானவர்கள் என்று எண்ணினோம். ஆனால் நம்மையும் பார்த்து சிலர் அஞ்சுகின்றனர். இந்தத் தவளைகளுக்கு நம்மைப் பார்த்தால் பயமாக இருக்கிறதுபோல'' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு இருந்தன. அப்போது ஒரு முயல் சொன்னது, ''நாம் பிரச்சனையில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும் நிச்சயமாக எதாவது ஒரு வழி இருக்கும். நாம் அந்த வழி என்ன என்று கண்டுபிடிப்போம். இந்த நதியில் விழுந்து நம் வாழ்வை முடித்துக்கொள்வதைவிட என்ன பிரச்சனை வந்தாலும் எதிர் கொள்வதே மேல்'' என்று கூறிக்கொண்டு உணவு தேடி வேறு இடத்திற்குத் திரும்பின.

*நீதி : பிரச்சனையை எதிர்த்துத் தீர்வு காண். பயந்து ஓடாதே.*




**பெ. சு. ரியோலின்**
**III "ஏ"**



ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். ஒருவர் சலவை தொழிலாளி, இன்னொருவர் மண்பானைகள் செய்யும் குயவர். இரண்டு பேருமே அரசரிடம் வேலை பார்த்து வந்தனர். ஒரு நாள் இரண்டு பேருக்கும் இடையில் சண்டை ஏற்பட்டது. அவர்கள் தங்கள் குறைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ளாமல் அரசரிடம் ஒருவரைப் பற்றி ஒருவர் குறைகூறிக் கொண்டு இருந்தனர். மண்பானை செய்யும் குயவர், சலவைத்

தொழிலாளியை அரசரிடம் வசமாகச் சிக்க வைக்க வேண்டும் என்று எண்ணி அரசரைப் பார்த்து அரசே! நமது பட்டத்து யானை கருப்பாக இருக்கிறது, யானையை சலவைத் தொழிலாளியிடம் கொடுத்து வெளுக்கச் சொல்லுங்கள் என்றார். அரசர் மிகப் பெரிய முட்டாளாவார். அவர் எதைப் பற்றியும் சிந்திக்காமல் சலவைத் தொழிலாளியை அழைத்து யானையை வெளுத்து வரும்படிக் கூறினார். உடனே சலவைத் தொழிலாளி அரசரைப் பார்த்து "அரசே! யானையை வெளுத்து விடலாம் யானையை வேக வைக்கும் அளவிற்கு பெரிய பானை ஒன்றை குயவரைச் செய்து தரச் சொல்லுங்கள் என்றார். அரசர் குயவரைக் கூப்பிட்டு "யானையை வேக வைக்க பெரிய பானையைச் செய்துகொடு" என்று ஆணையிட்டார். குயவர் திரு திரு என விழித்தார். இறுதியில் இருவரும் சந்தித்தனர். உன்னால் நானும் என்னால் நீயும் குறை கூறிக்கொண்டு மாட்டிக்கொண்டோம். இதனால் நம் இருவருக்குமே துன்பம். இனிமேல் இதுபோல் நடக்கக்கூடாது, நம் தவறுகளை நாமே திருத்திக்கொள்வோம் என்றனர். இருவரும் முன்பு போலவே நண்பர்களாயினர்.

*நீதி : ஒருவரை ஒருவர் குறை கூறுவது தவறு.*



# எறும்பும் புறாவும்



**அ. ஷை. கியாலினா ரெக்ஸி**

**I "ஏ"**



ஒரு குளத்தில் எறும்பு ஒன்று விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தது. அதைக் கண்ட மரத்தின் மேல் இருந்த புறா இலை ஒன்றைக் கிள்ளிப் போட்டது. அதன் மேல் ஏறி எறும்பு உயிர் பிழைத்தது. சில நாட்களுக்குப் பிறகு, வேடன் ஒருவன் அந்தப் புறாவைக் கொல்ல துப்பாக்கி எடுத்தான்.

அதைக் கண்ட எறும்பு புறாவைக் காப்பாற்ற நினைத்து அவன் காலைக் கடித்தது. வேடன் குறி தப்பியது. புறா மகிழ்ச்சியாகப் பறந்து சென்றது.

நீதி : காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.



# முயலும் ஆமையும்



தி. த. ஹரி தாரணி
III "ஏ"



ஒரு ஊரில் ஒரு முயலும், ஆமையும் நண்பர்களாக இருந்தன. முயலுக்குத் தான்தான் திறமைசாலி என்ற எண்ணம் இருந்தது. ஒருநாள் முயல் ஆமையிடம் நாம் இருவரும் ஓடினால் நான்தான் முதலில் வருவேன் என்று கூறியது. எனவே முயலும் ஆமையும் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டன. முயல் வேகமாக ஓடியது. சிறிது தூரம் ஓடியபின் திரும்பிப் பார்த்தது. ஆமை மெதுவாக வந்துகொண்டிருந்தது. இந்த வேகத்தில் வந்தால் இலக்கை அடைய வெகு நேரம் ஆகலாம் என முயல் எண்ணியது. எனவே இந்த மரத்தடியில் சிறிது நேரம் ஓய்வெடுத்துப் பின்னர் ஓடலாம், என எண்ணி ஓய்வெடுத்தது. திடீரென விழித்துப் பார்த்தபோது ஆமை தன் இலக்கை அடைந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது. முயல் ஆமையின் திறமையைக் குறைவாக மதிப்பிட்டதை எண்ணி வருந்தியது.

நீதி : விவேகம் வெற்றியைத் தரும்.



# இரண்டு தவளைகள்



சு. நல்ஜின்
I "ஏ"



அது ஒரு கோடைக்காலம், அதனால் காட்டில் இருந்த தண்ணீர் குட்டைகள் எல்லாம் வறண்டு போயிற்று. அதனால் அங்கு இருக்கின்ற தவளைகள் எல்லாம் நல்ல தண்ணீர் இருக்கின்ற குளத்தைத் தேடி ரொம்ப தூரம் நடந்து போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது இரண்டு தவளைகள் ஒரு பெரிய குழிக்குள் விழுந்து விட்டது. அந்தக் குழி ரொம்ப இருட்டாகவும், ஆழமாகவும் இருந்ததால் தவளைகளால் வெளியே வர இயலவில்லை. வெளியே இருந்த தவளைகளாலும் அவைகளுக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை.

அதில் ஒரு தவளை எந்த முயற்சியும் செய்யாமல், நம்மால் இனி உயிர் பிழைக்க முடியாது, இந்தக் குழிதான் என் மரணக்குழி என்று புலம்பி பயத்தினால் அங்கேயே இறந்தது.

ஆனால் இன்னொரு தவளை மிகவும் தன்னம்பிக்கையுடன் காணப் பட்டது. தொடர்ந்து வெளியில் செல்ல முயற்சி செய்துகொண்டிருந்தது. தன்னால் இயன்றவரை குதித்து குதித்துப் பார்த்தது. ஒவ்வொருமுறை குதிக்கும் போதும் தன்னுடைய உயரம் கூடுவதை உணர்ந்த தவளை மீண்டும் மீண்டும் முயற்சி செய்தது. அவ்வாறு முயற்சி செய்யும் போது ஒரு முறை குழியை விட்டு வெளியே வந்து விழுந்து உயிர் தப்பியது.

*நீதி : முயற்சி திருவினையாக்கும்.*
*முயன்றால் சாதிக்க முடியும்.*



# புள்ளி மான்கள்

ரா. அரியோஷ்
III "ஏ"



ஒரு காட்டில் இரண்டு புள்ளிமான்கள் ஒரே மாதிரியாக இருந்தன. இணை பிரியாத நண்பர்களாகவும் இருந்தன. எங்குச் சென்றாலும் சேர்ந்தே தான் செல்லும். ஒரு நாள் மழை பெய்தது. புள்ளிமான்களால் விளையாட முடியவில்லை. மழை நின்ற பிறகு வெளியே சென்று இன்னும் மழை வருமா! என்று இரண்டு மான்களும் மேலே பார்த்தன. அப்பொழுது மேகத்திற்குள்ளிருந்து வெளியே வந்தது சூரியன். இரண்டு மான்களும் சூரியனிடம் இன்னும் மழை வருமா? என்று கேட்டன. அதற்கு சூரியன் நான் வந்துவிட்டேனே! இனி எப்படி மழை வரும்? என்று சொல்லி மான்களைப்பார்த்து சிரித்தது. “எங்களைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்?” என்றது ஒரு மான். நீங்கள் இருவரும் பார்ப்பதற்கு ஒன்று போல் இருக்கிறீர்கள் உங்கள் இருவரில் யார் திறமைசாலி என்றது சூரியன். நாங்கள் இருவரும் திறமையானவர்கள்தான் என்றது புள்ளிமான்கள். சூரியன் சற்று யோசித்தது. பின்பு சரி, நான் உங்களுக்கு ஒரு போட்டி வைக்கிறேன், அதோ அங்கு ஒரு மரம் இருக்கிறது பாருங்கள் உங்களில் யார் அந்த மரத்தை முதலில் தொடுகிறார்களோ அவர்கள் தான் திறமையானவர்கள். இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நான் பரிசு தருவேன் என்றது. சூரியன் பரிசு தருவதாகச் சொன்னதும் இரண்டு மான்களும் ஓடத்தொடங்கின. ஆனால் மரத்தை தொடாமல் நின்று கொண்டிருந்தன. சூரியன், ஏன் மரத்தைத் தொடாமல் நின்று கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டது. ஒரு புள்ளிமான் சொன்னது நான் என் நண்பனுக்கு விட்டுக்கொடுத்துவிட்டேன் என்றது. இன்னொரு மானும், நானும் என் நண்பனுக்கு விட்டுக்கொடுத்துவிட்டேன் என்று சொன்னது. இதைக் கேட்டு பெரிதும் மகிழ்ந்த சூரியன் சொன்னது, புள்ளிமான்களே! உங்கள் ஒற்றுமையைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் இருவரும் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். உங்கள்

ஒற்றுமைக்குப்பதிலாக நான் வானவில்லைப் பரிசாகத் தருகிறேன் என்று கூறி விடைபெற்றது. மான்கள் இரண்டும் வானவில்லைக்கண்டு மகிழ்ந்தன.

**நீதி : ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**



ரிஷான். அ. தியாஸ்

I "ஏ"



# பெற்றோர் சொல்



ஒரு நாள் விடிந்ததும் ஒருவன் ஆடுகளை செழிப்பான புல்வெளியில் மேய்த்துக்கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. வேலியோரம் ஒரு ஆட்டுக்குட்டி மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்த ஒரு ஓநாய் ஆட்டுக்குட்டியைத் தின்னும் ஆசையில் பார்த்தது. வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, வேலிக்குள் எதையோ பார்ப்பதுபோல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி, உனக்கு என்ன வேண்டும்? என்றுக் கேட்டது. அதற்கு ஓநாய், நண்பா! இங்கு இளசான புல் இருக்கிறதா? என்று பார்க்கிறேன். இளம்புல் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும் என்றது. அதற்கு ஆட்டுக்குட்டி நீ மாமிசத்தைச் சாப்பிடுவாய் என்று என் அப்பாவும் அம்மாவும் சொன்னார்களே! என்றது. அதற்கு ஓநாய் இல்லை, இல்லை, அதெல்லாம் சுத்த பொய் என்றது. அப்படியென்றால் இரு நான் வெளியே வருகிறேன். நாம் இருவரும் சேர்ந்து மலையின் அந்தப் பக்கம் இருக்கும் இளம் புல்லைச் சாப்பிடலாம் என்று சொல்லிக் கொண்டு வெளியே வந்தது. உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது. அந்த ஆட்டுக்குட்டி ஓநாய்க்கு உதவிசெய்ய போய் தனது உயிரை இழந்துவிட்டது.

**நீதி : அனுபவம் நிறைந்தவரின் ஆலோசனை மிகவும் முக்கியம்**

## தன்னம்பிக்கை கதை

ர. கவிஸ்ரீ

III "ஏ"



ஒரு அரசன் போட்டி ஒன்றை அறிவித்தான். கோட்டைக் கதவைக் கைகளால் திறந்து தள்ள வேண்டும். வெற்றி பெற்றால் நாட்டின் ஒரு பகுதி தானமாக வழங்கப்படும். தோற்றால் தோற்றவரின் கைகள் வெட்டப்படும். மக்கள் பலரும் யோசித்துப் பயந்து போட்டியில் கலந்துக் கொள்ளவில்லை. ஒரே ஒரு இளைஞன் மட்டும் போட்டியில் கலந்து கொள்ள முன் வந்தான். போட்டியில் தோற்று விட்டால் கைகளை வெட்டிவிடுவார்கள். உன்னுடைய எதிர்காலம் என்னவாகும் என்றார்கள். அதற்கு அவன் சொன்னான், வென்றால் நானும் ஒரு அரசன், தோற்றால் கைகள் தானே போகும். உயிர் இல்லையே என்று கூறிவிட்டு கோட்டைக் கதவை இளைஞன் தள்ளினான். கதவு சட்டென திறந்தது. ஏனென்றால் கோட்டைக் கதவுகள் தாழ்ப்பாள் போடப்படவில்லை. திறந்துதான் இருந்தது. அவனும் ஒரு அரசன் ஆனான்.

*நீதி : முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.*

## உயர்ந்த ஆசை

ம. சாம் ரிஜோ

IV "ஏ"



பணக்கார இளைஞன் ஒருவன் விலையுயர்ந்த காரில் வந்தான். அங்கு ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். அதைக் கவனித்த பணக்கார இளைஞன் சொன்னான், இது என் அண்ணன் எனக்கு பரிசளித்தது என்று கூறினான்.

சிறுவன் முகத்தில் வியப்பு ஏற்பட்டது. அதற்கு அந்த இளைஞன் ‘உனக்கும் என் அண்ணன் போல அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப் படுகிறாயா?’’ என்று கேட்டான். அதற்குச் சிறுவன் சொன்னான், இல்லை அப்படியோர் அண்ணனாக நான் வளர வேண்டும் என்று விரும்புகிறேன் என்றான்.

*நீதி : எப்போதும் எண்ணங்கள் உயர்வாக இருக்க வேண்டும்.*



# எறும்பும் தேனியும்



**வே. ஆருஷி வேதானந்தா**

**I "ஏ"**



ஒருநாள் ஒரு எறும்பு தேனியைப் பார்த்து கேட்டது, தினமும் சிறுக சிறுக நீ தேனைச் சேகரிக்கிறாய், ஆனால் மனிதர்கள் நீ சேமித்த தேனை எடுத்துச் செல்கிறார்கள். உனக்கு அது வருத்தம் அளிக்கவில்லையா? எனக் கேட்டது. அதற்கு அந்தத் தேனீ, அவர்கள் என்னுடைய தேனைத் தான் எடுத்து செல்கிறார்கள். ஆனால் என்னுடைய உழைப்பையும், தன்னம் பிக்கையையும் எடுத்துச் செல்லவில்லை. என்னால் மறுபடியும் தேனைச் சேகரிக்க முடியும், என்று புன்னகையுடன் கூறியது.

*நீதி : உழைப்பும் தன்னம்பிக்கையும் வெற்றியைத் தரும்*



ஜெ. ஆரோக்கிய கிங்ஸ்லி

IV "ஏ"



# பூனையும் குரங்கும்



ஒரு காட்டில் இரண்டு பூனைகள் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் ஒரு பூனை ஒரு பிரட் துண்டைப் பார்த்தது. அதை இரண்டு பூனைகளும் பங்கு வைத்தன. அதில் ஒரு துண்டு சிறிதாகவும் மற்றொரு துண்டு பெரிதாகவும் இருந்தது. அதை வைத்துக் கொண்டு எனக்கு அது, உனக்கு இது எனச் சண்டை போட்டுக்கொண்டிருந்தன. அதை மரத்தின் மேல் இருந்து, ஒரு குரங்கு பார்த்துக்கொண்டிருந்தது. அப்போது குரங்கு கீழே வந்து நான் சமமாகப் பிரித்துத் தருகிறேன் என்று கூறி பெரிய துண்டைத் கடித்தது. இப்போது அந்தத் துண்டு சிறிதாகியது. மறுபடியும் மற்றொரு துண்டைக் கடித்தது இப்போது அதுவும் சிறிதாகியது. அவ்வாறு மாற்றி மாற்றி கடித்துத் தின்று தீர்த்து மகிழ்ச்சியாக சென்றது. பாவம் அந்த இரண்டு பூனைகளும் ஏமாந்து போயின.

*நீதி : இருப்பதை வைத்து சமமாக பகிர்ந்து உண்ண வேண்டும்.*



ம. ஜாஸ்வி செஜல்

V "ஏ"



# முட்டாள் கரடி



ஒரு நாள் ஒரு கரடி ஆற்றோரம் நடந்து வந்தது. அதற்கு மிகவும் களைப்பாகவும் பசியாகவும் இருந்ததால் ஆற்றில் மீன் பிடித்துச் சாப்பிட எண்ணியது. முதலில் ஒரு சிறிய மீனைப் பிடித்த கரடி இது மிகவும் சிறிய மீனாக உள்ளது. இது நமக்குப் போதாது. இதை விட்டு விட்டுப் பெரிய

மீனாகப் பிடித்து உண்ணலாம் என எண்ணியது. அந்தச் சிறிய மீனை விட்டு பெரிய மீனுக்காகக் காவல் இருந்தது. மறுபடியும் சிறிய மீன்களே கிடைத்தது. அந்த முட்டாள் கரடி அனைத்துச் சிறிய மீன்களையும் விட்டு விட்டது. பொழுதும் கடந்தது. கரடிக்கு மிகவும் களைப்பாகியது. அப்போதுதான் யோசித்தது. சிறு மீன்கள் அனைத்தையும் சாப்பிட்டிருந்தால் கூட வயிறு நிறைந்திருக்கும். இப்போது ஒன்றுமே உண்ணவில்லையே என்று வருந்தியது.

*நீதி : சிறு துரும்பும் பல் குத்த உதவும். இருப்பதை விட்டு விட்டுப் பறப்பதற்கு ஆசைப்படக்கூடாது.*



## சிங்கமும் சிலையும்




ம. ஆன்றனி ஜூட்சல்

IV "ஏ"



ஒரு நாள் ராமு தன்னுடைய சிங்கத்தை அழைத்துக்கொண்டு காட்டுப் பகுதிக்கு தேன் எடுப்பதற்கு சென்றுக் கொண்டிருந்தான். செல்லும் வழியில் தங்களில் யார் அதிக வீரமுடையவர்கள் என்பதைப் பற்றி பேசிக் கொண்டே சென்றனர். அப்போது வழியில், ‘‘ஒரு மனிதன் சிங்கத்தை கீழே தள்ளி அதன் மீது நிற்பதுபோல்’’ ஒரு சிலை இருந்தது. அதைப் பார்த்த ராமு சிங்கத்திடம், அந்த சிலையைப் பார்த்தாயா? யாருக்கு அதிக வீரம் இருக்கிறது? என்றான். உடனே சிங்கம் ‘‘ஓ அது மனிதன் செய்த சிலை ஒரு சிங்கம் சிலை செய்திருந்தால் மனிதனைக் கீழே தள்ளி அதன் மீது சிங்கம் நிற்பதுபோல் செய்திருப்பான்’’ என்று சொல்லியது சிங்கம்.

*நீதி : தனக்கென்றால் தனி வழக்குதான்*



பொ. ஜாஃபினா

V "ஏ"



# நம்பிக்கை

நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டு இருந்தன. மெலிதாய் காற்று வீசிக்கொண்டு இருந்தது. காற்று வீசியதும் “அமைதி” என்கிற முதல் மெழுகுவர்த்தி, ஐயோ! காற்று வீசுகின்றது, நான் அணைந்து விடுவேன் என்று பலவீனமாகச் சொன்னது. காற்றுப் பட்டதும் அணைந்து விட்டது.

“அன்பு” என்கிற அடுத்த மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்க்க முடியாது என்று அணைந்துவிட்டது “அறிவு” என்கிற மூன்றாவது மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்கொள்ள முடியாமல் அணைந்துவிட்டது. நான்காவது மெழுகுவர்த்தி மட்டும் காற்று வீசிய சில நொடிகள் போராடி ஜெயித்து விட்டது. அப்போது அந்த அறையில் ஒரு சிறுவன் நுழைந்தான். அடடா மூன்று மெழுகுவர்த்தியும் அணைந்து விட்டதே? என்று கவலையுடன் சொன்னான். அதற்கு எரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்தி சொன்னது, “கவலைப்படாதே நான் இருக்கிறேன், என்னை வைத்து மற்ற மூன்றையும் பற்ற வை” என்றது. உடனே சிறுவன் நான்காவது மெழுகு வர்த்தியைப் பார்த்து உன் பெயர் என்ன? என்று கேட்டான். “நம்பிக்கை” என்றது அந்த மெழுகுவர்த்தி.

*நீதி : நாம் எப்போதும் வாழ்வில் நம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது.*



# உண்மை உயர்வைத்தரும்



சு. பிரஜின்
II "ஏ"



ஒரு ஊரில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் நல்லவர். தினமும் காட்டுக்குச் சென்று விறகுகளை வெட்டி, அதில் கிடைக்கும் வருமானத்தில் தன் குடும்பத்தை நடத்திக்கொண்டிருந்தார். ஒரு நாள் காட்டிற்கு சென்று விறகு வெட்டிக் கொண்டிருக்கும்போது, அவன் கோடாரி தவறி குளத்தில் விழுந்தது. அதைக் கண்ட விவசாயி பதறிப் போனார். அவர் அந்தக் கோடாரியை எடுக்க முயற்சி செய்தார். அவரால் எடுக்க முடியவில்லை. இதனால் வருத்தத்துடன் அந்தக் குளத்தின் அருகில் உட்கார்ந்து இருந்தார்.

அப்போது அந்தக் குளத்திலிருந்து தீடீரென ஒரு தேவதை தோன்றியது. அந்தத் தேவதை அவர் வருத்தத்துடன் அமர்ந்திருப்பதைக் கண்டு ஏன் இவ்வளவு வருத்தத்துடன் இருக்கிறாய்? என்று கேட்டது. அதற்கு அவர் நடந்தவற்றையெல்லாம் கூறினார். இனி அந்தக் கோடாரி இல்லாமல் நான் எப்படி விறகு வெட்டுவேன்? என வருத்தத்துடன் கூறினான்.

இதனைக் கேட்ட தேவதை குளத்திற்குள் சென்று ஒரு தங்கக் கோடாரியை எடுத்துவந்தது. இந்தக் கோடாரியா உன்னுடைய கோடாரி? என்று கேட்டது. உடனே. அவர் இது என்னுடைய கோடாரி இல்லை. என்னுடைய கோடாரி இரும்பினால் செய்யப்பட்டது, என்றான். தேவதை மறுபடியும் குளத்திற்குள் சென்று வெள்ளியினால் செய்யப்பட்ட ஒரு கோடாரியை எடுத்து வந்தது. அதற்கு அவர் இதுவும் என் கோடாரி இல்லை என்றார். தேவதை மறுபடியும் குளத்திற்குள் மூழ்கி இரும்பினால் செய்யப்பட்ட ஒரு கோடாரியை எடுத்து வந்தது. இதனைக் கண்ட விவசாயி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இதுதான் என் கோடாரி என்று கூறி தேவதையிடம் இருந்து கோடாரியைப் பெற்றுக் கொண்டார். எந்தச் சூழ்நிலையிலும் பிறர் பொருளுக்கு ஆசைப்படாத விவசாயியைக் கண்ட தேவதை தங்கம் மற்றும் வெள்ளியினால் செய்யப்பட்ட கோடாரியையும்

அவனிடமே கொடுத்துவிட்டு விடைபெற்றது. விவசாயி மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான்.

நீதி : "உண்மைக்கூறுதல்", "எந்தச் சூழ்நிலையிலும் பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் இருத்தல்".

ஆ. ஆரோ அஜோன்
II "ஏ"





# நற்பண்புகளைக் கற்றுக் கொள்ளுதல்



ஒரு ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் மகன் தீய பழக்கங்கள் அதிகம் கொண்டவனாக இருந்தான். அவனது அப்பா எவ்வளவோ முயன்றும், அவனைத் திருத்த முடியவில்லை. அதனால் ஒரு ஞானியிடம் தன் மகன் திருந்த உதவிக் கேட்டார். ஞானியும் ஒப்புக்கொண்டு, அவரது மகனை அழைத்துக்கொண்டு நடைப்பயணம் சென்றார்.

அவர்கள் இருவரும் வனப் பகுதியில் செல்லும் போது, ஞானி அந்தச் சிறுவனிடம் ஒரு செடியைக் காட்டி, அதை உன்னால் பிடுங்க இயலுமா? என்று கேட்டார். சிறுவனும் அதை எளிதாக பிடுங்கிக் காட்டினான். சற்று தூரம் சென்ற பிறகு ஒரு முட்புதரைக் காட்டி, இதை உன்னால் பிடுங்க முடியுமா? என்றார். உடனே சிறுவனும் தன் சக்தியை பயன்படுத்தி பிடுங்கிக் காட்டினான். பின்னர் ஒரு பெரிய மரத்தைக் காட்டி இதை உன்னால் பிடுங்க முடியுமா? என கேட்டார். உடனே சிறுவன் தயங்கியவாறு என்னால் முடியாது, எனக் கூறினான். உடனே ஞானி இதைப்போல தான், நமது பழக்கங்களும், தீய பழக்கங்களை முளையிலே எளிதாகக் கிள்ளி எறிந்து விடலாம். ஆனால் அது வளர்ந்து விட்டால் அதிலிருந்து விடுபடுவது மிகவும் கடினம், எனக் கூறினார். சிறுவன் தன் தவறை உணர்ந்தான்.

நீதி : தீய பழக்கங்களை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும்.



செ. அ. ஷியாலின் ஜியோனா
II "ஏ"



# உழைப்பே உயர்வு



முன்னொரு காலத்தில் ஒரு உப்பு வியாபாரி இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்கு போக வேண்டும். ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம் போல கழுதையின் மேல் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்குக் கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றை கடந்த போது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் தடுமாறிவிட்டது. எனவே கழுதை ஆற்றுக்குள் விழுந்து விட்டது. கழுதை விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்துவிட்டது. கழுதை வியாபாரி தூக்கி விட்டான். ஆனால் உப்பு மூட்டை தண்ணீரில் கரைந்து பாதி மூட்டையாகிவிட்டது. இப்போது கழுதை முதுகில் சுமையே இல்லை. கழுதைக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் வியாபாரிக்கு மிகுந்த நஷ்டம். மறுநாளும் வழக்கம் போல் வியாபாரி உப்பு வியாபாரத்திற்குக் கிளம்பினான். கழுதை ஆற்றைக் கடக்கும்போது மெல்ல தடுமாறுவது போல செய்து ஆற்றுக்குள் விழுந்தது. அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்து விட்டது. கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்து வந்தது. வியாபாரிக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிந்தது. அதற்கு நல்ல பாடம் புகட்ட எண்ணினான். மறுநாள் வழக்கம் போல உப்பு மூட்டைக்குப் பதிலாகப் பஞ்சு நிறைந்த சாக்கு முட்டையை ஏற்றினான். கழுதை வழக்கம்போல ஆற்றிற்குள் விழுந்தது. மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது அட கஷ்டமே! கழுதை முதுகில் இருந்த பஞ்சு மூட்டை முன்பை விட அதிகம் கனத்தது. கழுதை மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றை கடந்தது தனது ஏமாற்று வேலை வியாபாரிக்கு தெரிந்தது, என்பதை எண்ணி கழுதை வெட்கப்பட்டது, இனி நேர்மையாக நடக்க வேண்டும் என்று முடிவெடுத்தது.

*நீதி : நாமும் நம்மை நம்பியவரை ஏமாற்றக்கூடாது.*



சு. பிளஸ்ஸன் ஜோயல்

VI "ஏ"



# முதலையும் குரங்கும்



ஒரு காட்டில் ஒரு குரங்கு வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுப்பகுதியில் ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் ஒரு நாவல் மரம் இருந்தது. அதில் இருந்த நாவல் பழங்களைத் தின்று குரங்கு உயிர் வாழ்ந்து வந்தது.

அக்காட்டின் ஒரு பகுதியில் ஆறு ஒன்று ஓடியது. அந்த ஆற்றில் எப்போதுமே நீர் பெருக்கெடுத்து ஓடும். ஆற்றிற்கு மறு பக்கத்தில் சென்று பார்க்க வேண்டும் என்று குரங்கிற்கு ஆசை ஏற்பட்டது. ஆனால் குரங்கிற்கு அந்த ஆற்றைக் கடக்க பயமாக இருந்தது.

ஒரு நாள் ஆற்றில் இருந்த முதலை குரங்கிடம் “நாவல் பழம் மிகவும் ருசியாக உள்ளதா?” எனக் கேட்டது. குரங்கு முதலையாரே! உமக்கும் சில நாவல் பழங்களைப் பறித்துத் தருகிறேன் சாப்பிட்டுப்பாருங்கள், என்று நாவல் பழங்கள் சிலவற்றை பறித்து முதலையின் வாயில் போட்டது. முதலையும் பழத்தை ருசித்துச் சாப்பிட்டது. அவற்றைச் சாப்பிட்ட முதலை இந்தச் சுவையான பழங்களை உண்ணும் குரங்கின் ஈரல் மிகவும் ருசியாக இருக்கும் என எண்ணி, குரங்கின் ஈரலை உண்ண திட்டம் தீட்டியது. குரங்கிடம் ஆற்றின் மறு கரையில் நல்ல நல்ல பழங்கள் இருக்கிறது. நீ அங்குச் சென்றால் அப்பழங்களை நீயும் உண்டு எனக்கும் தரலாம் அல்லவா! என்றது. அதற்குக் குரங்கு, எனக்கும் ஆற்றின் மறு கரையைப் பார்க்க வெகு நாட்களாக ஆசை. ஆற்றைக் கடந்து போக பயமாக இருக்கிறது என்றது.

அதனைக் கேட்ட முதலை நான் இப்பொழுதே உன்னைக் கூட்டிக் கொண்டு போகிறேன். நீ என் முதுகில் ஏறிக் கொள் என்று கூற, குரங்கும் அதன் முதுகில் ஏறிக் கொண்டது. தனது ஆசையை நிறைவேற்ற இதுதான் தருணம் என்று எண்ணிய முதலை, குரங்கை நடு ஆற்றிற்குக் கொண்டு சென்று, தன் ஆசையைக் குரங்கிடம் சொன்னது.

அதைக்கேட்டு குரங்கு, தன் பயத்தை வெளிக்காட்டாமல், அப்படியா! நீ ஏன் முதலில் அதை என்னிடம் சொல்லவில்லை. நீரில் நனைந்து என் ஈரல் பழுதாகிவிடும் என்று எண்ணி நான் என் ஈரலை மரக்கிளையில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். என்னைத் திரும்ப மரத்தடிக்கு கொண்டுசெல் நான் திரும்ப மாட்டிக்கொண்டு வருகிறேன் என்று கூறியது.

முதலையும் யோசிக்காது குரங்கை மரத்தடிக்கு அழைத்துக் கொண்டு வந்தது. குரங்கு முதலையிடம் "முட்டாள் முதலையே! ஈரலை உடலிலிருந்து எப்படி கழட்டி மாட்ட முடியும்? உன்னை நம்பிய என்னை ஏமாற்றி விட்டாயே, நியாயமா?" என்று கேட்க முதலையும் ஏமாந்து திரும்பியது.

*நீதி : நாம் யாரையும் கண்மூடித்தனமாக நம்பக்கூடாது. சிந்தித்துச் செயல்படு*



**ச. ஜோன்னா சான்டஃபி**

**I "ஏ"**



# இரண்டு நண்பர்கள் மற்றும் கரடி



விஜய்யும், ராஜுவும் நண்பர்கள். ஒருநாள் நண்பர்கள் இருவரும் இயற்கையின் அழகை ரசித்துக்கொண்டு ஒரு காட்டுக்குள் நடந்து சென்றனர். திடீரென்று கரடி ஒன்று அவர்களை நோக்கி வருவதைக் கண்ட நண்பர்கள் இருவரும் பயந்துபோனார்கள்.

மரம் ஏற நன்கு அறிந்து இருந்த ராஜு, ஒரு மரத்தின் மீது வேகமாக ஏறினான். அவன் விஜய்யை பற்றி நினைக்கவில்லை. விஜய்க்கு எப்படி மரம் ஏறுவது என்று தெரியவில்லை.

விஜய் ஒருநொடி யோசித்தான். விலங்குகள் இறந்த உடல்களை விரும்புவதில்லை, என்பதைக் கேள்விப்பட்டிருந்த அவன் தரையில் விழுந்து மூச்சைப் பிடித்துப் படுத்தான். கரடி அவனை மோப்பம் பிடித்து இறந்து விட்டதாக நினைத்து அவனை விட்டுச் சென்றது.

ராஜு விஜய்யிடம் கேட்டான் “கரடி உங்கள் காதுகளில் என்ன கிசுகிசுத்தது? விஜய் “உங்களை போன்ற நண்பர்களிடம் இருந்து விலகி இருக்குமாறு கரடி என்னைக் கேட்டு கொண்டது” என்று பதிலளித்தான்.

*நீதி : உண்மையான நண்பனை ஆபத்தில் அறிந்துகொள்.*



# பேராசை கொண்ட சிங்கம்



**ஆ.சீ. ஜேப்ரோ அனீக்**

**I "ஏ"**



அது நம்பமுடியாத வெப்பமான நாள், சிங்கம் மிகவும் பசியுடன் இருந்தது. தன் குகையை விட்டு வெளியே வந்து அங்கும் இங்கும் இரை தேடியது. சற்று தொலைவில் ஒரு முயல் தென்பட்டது. சிங்கம் தயக்கத்துடன் அந்த முயலைப் பிடித்தது. “இந்த முயல் என் வயிறை நிரப்ப முடியாது” என்று நினைத்து, அந்த வழியே ஓடிய மானைக் கண்டதும், இந்தச் சிறிய முயலைச் சாப்பிடுவதற்குப் பதிலாய் பெரிய மானை சாப்பிடலாம் என்று எண்ணி, முயலை விட்டுவிட்டு மானின் பின்னால் ஓடியது. ஆனால் அந்த மான் காட்டுக்குள் சென்று மறைந்துவிட்டது. சிங்கம் இப்போது முயலை விட்டதற்காக வருந்தியது.

*நீதி : “பேராசை பெருநஷ்டம்”*

# எறும்பு மற்றும் வெட்டுக்கிளி

அ. ஸ்னோ இவானா
IV "ஏ"



எறும்பும், வெட்டுக்கிளியும் சிறந்த நண்பர்கள். கோடைக்காலத்தில் எறும்பு தனது உணவைச் சேமிக்க அயராது உழைக்கும். மறுபுறம் வெட்டுக்கிளி நாள் முழுவதும் விளையாடிக்கொண்டிருந்தது. குளிர்காலம் வந்த போது எறும்பு தனது வீட்டில் சூடாகவும், வசதியாகவும் இருந்தது. வெட்டுக்கிளி வீட்டில் பசி மற்றும் குளிர் எனவே வெட்டுக்கிளி எறும்பிடம் உதவி கேட்டது, எறும்பு உணவைப் பகிர்ந்து கொடுத்தது எனினும் முழு குளிர்காலத்தையும் தாங்குவதற்கு அது போதுமானதாக இல்லை. எறும்பிடம் மீண்டும் உணவைக் கேட்கவே அது பின்வருமாறு கூறியது. ‘‘மன்னிக்கவும் நண்பரே’’ என்னிடம் உள்ள உணவு எனது குடும்பத்திற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. நான் இன்னும் உமக்குக் கொடுத்தால், நாங்கள் அனைவரும் பட்டினிக் கிடப்போம். முழு கோடைக்காலத்திற்கும், வரவிருக்கும் குளிர்காலத்திற்கும் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக நீங்கள் விளையாட்டைத் தேர்ந்தெடுத்தீர்கள்". என்று அறிவுரைக் கூறியது.

*நீதி : நேரத்தைப் பயன்படுத்தியவன் தோற்றதுமில்லை; வீணாக்கியவன் வென்றதுமில்லை.*



ஜா. ஆனி ஹெட்ஷியா

III "ஏ"



# துணிவு



அரண்மனையில் ஒரு எலி அட்டகாசம் செய்துகொண்டிருந்தது. அந்த எலியைப் பிடிக்க ஒரு பூனையை வளர்த்தார்கள். அந்தப் பூனை எவ்வளவோ முயற்சி செய்தும் அந்த எலியைப் பிடிக்க முடியவில்லை. அந்த எலியின் தொல்லையைப் பொறுக்க முடியாமல் பக்கத்து ஊர்களிலிருந்தும் பல்வேறு பூனைகளைக் கொண்டு வந்தார்கள். ஆனால் எலி மட்டும் அகப்படவில்லை. இதைக் கவனித்துக்கொண்டிருந்த ஒரு காவலாளி, தான் வீட்டில் வளர்த்த பூனையைக் கொண்டுவந்தான். அந்தப் பூனை வந்த கொஞ்ச நேரத்திலேயே எலியைப் பிடித்துவிட்டது. அதைப் பார்த்த அங்கிருந்தவர்களுக்கு ஒரே ஆச்சரியம். நீ என்ன பயிற்சி கொடுத்து அதை வளர்க்கிறாய்? என பல கேள்விகளைக் கேட்டார்கள். அதற்கு அந்த காவலாளி, என் பூனைக்குப் பெரிய பயிற்சியோ, திறமையோ தேவையில்லை. அது பசியில் இருந்தது அவ்வளவுதான், என்றான். அரண்மனைப் பூனையும் அயல்நாட்டுப் பூனையும் நன்கு  தின்று கொழுத்து இருந்தது. அதனால் இந்த எலியைப் பிடித்து தான், தன் பசியைப் போக்க வேண்டும் என்கிற அவசியம் அதற்கு இல்லை. இதே போலத்தான் நாமும் எடுத்த காரியத்தை செய்து முடிக்க வேண்டும், என்கிற தேவை இருக்க வேண்டும். ஒரு வேட்கை  இருக்க வேண்டும், அப்போதுதான் அதைக் கச்சிதமாகவும், வெற்றிகரமாகவும் செய்து முடிக்க முடியும்.

*நீதி : எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு.*



# கவனம்



லெ. ரியால்னி

I "ஏ"



ஒரு அரசனுக்குத் தன் பற்கள் எல்லாம் விழுந்து பொக்கை வாயோடு இருப்பது போல் கனவு வந்தது. காலையில் எழுந்ததும் பயந்து போன அரசன், ஒரு ஜோதிடரை வரவழைத்து அந்தக் கனவுக்கான பலனைக் கேட்டார். அந்த ஜோதிடரும் எல்லா ஓலைச் சுவடிகளையும் புரட்டிப் பார்த்து விட்டு, ''அரசே! உங்கள் சொந்த பந்தங்கள், மனைவி, மக்கள் எல்லோருமே உங்களுக்கு முன்பாகவே இறந்துவிடுவார்கள்'' என்று கூறினான். இதைக் கேட்டு கோபமான அரசர் அவரைப் பிடித்துச் சிறையில் அடைத்தார். ஆனாலும் அரசருக்கு மனம் ஆறவில்லை, இன்னொரு ஜோதிடரை அழைத்து, அதற்கான பலனைக் கேட்டார். ''அரசே! உங்கள் சொந்த பந்தங்கள், மனைவி, மக்கள் எல்லோரையும் விட நீங்கள் ரொம்ப நாள் வாழ்வீர்கள்'' என்று சொன்னார். இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த அரசர், அவருக்கு வேண்டிய எல்லாப் பரிசுப் பொருட்களையும் கொடுத்து அனுப்பினார். இரண்டு ஜோதிடரும் சொன்ன விஷயம் ஒன்றுதான். அனால் பயன்படுத்திய வார்த்தைகள் வேறு.

*நீதி : வார்த்தையில் கவனம் தேவை.*



மை. ஷீ. ஷானோ அத்மிக்
I "ஏ"



# நேர்மறை எண்ணம்



இரண்டு அணில்கள் ஒரு மரத்தில் வாழ்ந்து வந்தன. ஒரு அணிலுக்குக் கடவுள் பக்தி மிக அதிகம். எது நடந்தாலும் கடவுள் நல்லதுக்குதான் நடத்துவார் என்று நினைத்து, கடவுளிடம் வேண்டுதல் செய்துகொண்டு இருக்கும். இதைப் பார்த்த மற்றொரு அணில் தன் நண்பன் அணிலைக் கேலி செய்து சிரித்துக்கொண்டே இருக்கும். ஒருநாள் இரண்டு அணில்களும் மரத்தில் ஏறி விளையாடும்போது, கடவுள் பக்தி உள்ள அணில் மரத்தில் இருந்து கீழே விழுந்தது. விழும் போது கடவுளிடம் வேண்டியது. சிறிய காயத்துடன் உயிர் தப்பியது. "உன்னைக் காப்பாற்றிய கடவுள் உன்னைக் கீழே விழாமல் செய்திருக்கலாமே" என்று கூறி கேலி செய்து சிரித்தது. அதற்கு அந்த அணில் கடவுள் எதோ ஒரு நன்மைக்குத் தான் எனக்கு இதைச் செய்தார், என்று சொல்லி கடவுளுக்கு நன்றி கூறியது. சிறிது நேரத்தில் மரத்தின் மேல் இருந்த அணிலைப் பாம்பு ஒன்று விழுங்கியது.

*நீதி : நடப்பதெல்லாம் நன்மைக்கே.*



# நரியின் சமயோகிதம்



த. ரியான் அலெக்ஸ்
II "ஏ"



ஒரு அடர்ந்த காட்டில் சிங்கம் ஒரு கூட்டம் கூட்டியது. எல்லா மிருகமும் வந்தன. முதலில் ஒரு குரங்கைக் கூப்பிட்டு, என் உடம்பை முகர்ந்துபார், எப்படி இருக்கிறது என்று கேட்டது. குரங்கு முகர்ந்து பார்த்து விட்டு வாசனை நல்லா இல்லீங்க, கொஞ்சம் மோசமாதான் இருக்கிறது, என்று சொல்லியது. சிங்கம் கோபமடைந்து என் உடம்பையா அப்படிச் சொல்கிறாய்? என்று ஓங்கி ஒரு அறை விட்டது. குரங்கு கீழே விழுந்து விட்டது. அடுத்து ஒரு கரடியை அழைத்து, நீ வா வந்து முகர்ந்து கூறு என்றது. கரடி அந்தக் குரங்கைப் பார்த்துவிட்டே வந்தது. சிங்கத்தை முகர்ந்து பார்த்துவிட்டு ஆகா! ரோஜா பூ வாசனை! என்று கூறியது. பொய்யா சொல்கிறாய் என்று ஓங்கி ஒரு அறை விட்டது. அதுவும் கீழே விழுந்தது. அடுத்தபடியாக ஒரு நரியைக் கூப்பிட்டு, நீதான் சரியாகக் கூறுவாய் நீ வந்து முகர்ந்து பார்த்துவிட்டுக் கூறு என்றது. நரி, குரங்கையும், கரடியையும் பார்த்துவிட்டு, சிங்கத்தை முகர்ந்து பார்த்து, மன்னிக்கணும் தலைவா! எனக்கு மூணு நாளா ஜலதோஷம்! என்று சொல்லி நரி தந்திரமாகத் தப்பிக் கொண்டது.

*நீதி : சமயோகித புத்தி எல்லா மனிதர்களுக்கும் இருத்தல் வேண்டும்.*



## சுண்டெலியின் முதல் அனுபவம்



இ.ஜா. ஈவ்லின் இஜா
II "ஏ"



சுண்டெலி ஒன்று முதல் முறையாக, வெளி உலகைக் காண வளையை விட்டு வெளியே வந்தது. அச்சமயம் வயலில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு சேவலை அது பார்க்க நேர்ந்தது. “ஐயோ நிறைய இறக்கை, கூர்மையான மூக்குடன் இந்தச் சேவல் மிகக் கொடூரமாய் இருக்கிறதே!” எனப் பயந்து நடுங்கியது. சற்று நேரத்தில் பூனை ஒன்றைப் பார்த்த எலி, “எவ்வளவு அமைதியான மிருகம். பொசு பொசுவென முடி, சாந்தமே உருவான கண்கள்” என மனதுக்குள் பூனையைப் பாராட்டியது.

தன் வளைக்குள் திரும்ப நுழைந்த எலி, தன் தாயிடம் தான் பார்த்த வெளி உலக அனுபவத்தைப் பற்றிக் கூறியது. அதைக்கேட்ட தாய் எலி, “அமைதியான உருவம் கொண்ட பூனைதான் நம் உண்மையான எதிரி! சேவல் அல்ல” என அறிவுறுத்தியது.

*நீதி : “உருவம் கண்டு ஏமாறாதே!”*



## புத்திசாலி முயல்



ஜெ. ஜெனின் மேத்யூ
I "ஏ"



ஒரு காட்டில் முயலும், நரியும் சந்தித்துக்கொண்டன. நரியிடம் முயல், “நரியாரே! பார்ப்பதற்கு மிக சாதுவாக இருக்கும் உன்னை எல்லோரும் தந்திரக்காரன், ஏமாற்றுப்புத்திக்காரன் என்று ஏன் கூறுகிறார்கள்?” என்று கேட்டது.

நரியோ அசட்டுச் சிரிப்புடன், “அவர்கள் எல்லாம் பொய்யர்கள். நான் உன் நண்பன். இன்று இரவு நீ என் வீட்டிற்கு விருந்துக்கு வா. அங்கு மீதியைப் பேசிக்கொள்வோம்" எனக் கூறி சென்றது.

முயலும் நரியின் வீட்டிற்கு இரவு விருந்து உண்ண ஆவலுடன் செல்ல, சாப்பாடு மேசையில் ஒன்றுமே இல்லாமல் வெறுந்தட்டுகள் மட்டுமே இருந்தது.

“அடடா! இன்று நரிக்கு இரவு உணவு நான் தான் போலும், மற்ற விலங்குகள் எல்லாம் சொல்லிக்கொண்டது சரிதான்”, என எண்ணிக் கொண்டு தப்பித்தோம், பிழைத்தோம் என அங்கிருந்து ஓடியது முயல்.

*நீதி : “சூழ்நிலை அறிந்து செயல்படு”.*



**இ.ஜா.இமலின் சாமுவேல்**

**V "ஏ"**



# புலியும் சிங்கமும்



அது ஒரு கோடைக்காலம். அந்தக் காட்டில் வாழ்ந்த மிருகங்கள் காட்டை விட்டு வேறு காட்டுக்குச் சென்று விட்டன. இதனால், காட்டில் உள்ள மற்ற விலங்குகளுக்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அந்த காட்டில் வாழ்ந்த சிங்கமும் புலியும் ஒரு ஒப்பந்தம் செய்தன. “சிங்கம் புலியிடம், நாம் இருவரும் ஒன்றாக வேட்டையாடி இரையை சமமாகப் பிரித்துக் கொள்வோம்” என்றது. புலியும் சம்மதம் தெரிவித்தது.

ஒரு நாள் சிங்கமும், புலியும் வேட்டைக்குச் செல்லும் போது, வழி தவறி கால் உடைந்த மான் குட்டி ஒன்று அமர்ந்திருப்பதைப் பார்த்த சிங்கத்திற்கும், புலிக்கும் அளவற்ற மகிழ்ச்சி. ஏனெனில் சிங்கமும், புலியும் உணவு சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டது. சிங்கமோ, “மானின் வயிற்றுப்பகுதி எனக்குத்தான்” என்றது. புலியோ!, “இல்லை இல்லை அதன் வயிற்றுப்பகுதி எனக்குத்தான்” என்றது. மானைப் பங்குப் போடுவதில்,

சிங்கத்திற்கும், புலிக்கும் பயங்கரமாகச் சண்டை ஏற்பட்டது. வெகு நேரம் சண்டை செய்ததால் இரண்டும் களைப்படைந்துவிட்டன. அதனால் தரையில் சாய்ந்தன. இதை வெகு தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த குள்ள நரி, ஓடி வந்து அங்கிருந்த மானைத் தூக்கிக்கொண்டு ஓடியது. சிங்கமும் புலியும் ஒன்றும் செய்ய முடியாமல் அதனைப் பார்த்தபடி தரையில் கிடந்தன.

நீதி : "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு".



# ஏழையின் மகிழ்ச்சி



ச. சாரா பிரான்ஸி

VI "ஏ"



ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவரும் ஏழை ஒருவரும் குடி இருந்தனர். ஏழை தினமும் யார் வயலிலாவது உழைத்துக் கிடைக்கின்ற கூலியுடன் வீடு திரும்புவான். எந்தக் கவலையும் இல்லாமல் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தான். அவன் வீட்டுக் கதவு எப்பொழுதும் திறந்தே இருக்கும். படுத்தவுடன் நன்றாகத் தூங்கியும் விடுவான்.

ஆனால் செல்வந்தரோ, எப்பொழுதும் பரபரப்புடனும், கவலையுடனும் காணப்படுவான். தன் வீட்டுக் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடியே வைத்திருப்பான். திருடர்கள் வீட்டிற்குள் நுழைந்து விலையுயர்ந்த பொருட்களைத் தூக்கி சென்று விடுவார்களோ!, என்று அஞ்சினான். அவன் இரவில் தூங்குவதே இல்லை.

ஏழை எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கண்ட அவன், இவ்வளவு செல்வம் இருந்தும் தன்னால் அவனைப்போல் மகிழ்ச்சியுடன் இருக்க முடியவில்லையே! என்று வருந்தினான்.

ஏழையிடம் செல்வம் இருந்தால் என்ன நடக்கும் என்பதை அறிய விரும்பினான். ஒரு நாள் அவன் அந்த ஏழையிடம் உனக்கு நூறு

பொற்காசுகள் தருகிறேன். நீ மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்து, என்று கூறினான்.

செல்வந்தரிடம் நூறு பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட ஏழை மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தான். இரவு வந்தது, இந்தப் பொற்காசுகளை திருடர்கள் திருடி சென்று விடுவார்களோ என்ற அச்சத்தில் வீட்டுக்கதவை மூடித்தாழ்ப்பாள் போட்டான்.

தூங்கும் போது திருடர்கள் வந்தால் என்ன செய்வது என்ற கவலையில் இரவு முழுவதும் அவன் தூங்கவில்லை. சிறு ஓசை கேட்டாலும் அஞ்சி நடுங்கினான். தன் மகிழ்ச்சி பறிபோனதற்குக் காரணம் பொற்காசுகள்தான் என்று உணர்ந்தான்.

பொழுது விடிந்தது. பொற்காசுகளை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டிற்கு வந்தான். “ஐயா! நான் ஏழைதான், உங்கள் பொற்காசுகள் என் மகிழ்ச்சியையும் மன அமைதியையும் குறைத்துவிட்டன. எனக்கு இந்தப் பொற்காசுகள் வேண்டாம். நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று, செல்வந்தரிடம் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மகிழ்ச்சியுடன் தன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

*நீதி : மிகுந்த செல்வம் மன நிம்மதியைக் கெடுக்கும்.*



## தேவை உள்ள நண்பர்

**சே. பெசலெயேல் சாம்**

**V "ஏ"**





யானைகளின் கூட்டம் ஒரு காட்டில் வாழ்ந்து வந்தது. யானைகளும் மகிழ்ச்சியாக இருந்தன. ஒருமுறை அவைகள் கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டன. அவை வாழ்வதற்குத் தண்ணீர் தேவைப் பட்டது. தண்ணீர் இன்றி உயிர் வாழ்வது மிகவும் சிரமமாக இருந்தது. யானைகளின் தலைவர் கூட்டத்திற்கு அழைத்தார். கூட்டத்தில் பத்து

யானைகள் தேர்வு செய்யப்பட்டன. அவை தினமும் ஏரி அல்லது நதியைத் தேடி செல்லவேண்டும், என முடிவு செய்தன.

அடுத்த நாள் ஒரு யானை அருகில் ஒரு ஏரி இருப்பதாகக் கூறியது. ஆனால் ஏரியைக் கடக்க ஒரு சிறு கிராமத்தைக் கடக்க வேண்டும் என்று கூறியது. அனைத்து யானைகளும் ஏரியை நோக்கிச் சென்றன. அந்தக் கிராமத்தில் ஏராளமான எலிகள் இருந்தன. யானைகள் நடக்கும் போது எலிகளை மிதித்தன. அதனால் பல எலிகள் இறந்தன.

தண்ணீர் குடித்து வரும்போது எலிகளின் தலைவன் யானைகளை நிறுத்தினார். என் அன்பான யானைகளே! நீங்கள் தண்ணீர் குடிக்க கிராமத்தைக் கடக்கும் போது எங்களில் பலர் கொல்லப்படுகிறார்கள், என்று எலிகளின் தலைவன் கூறியது. ஓ! மன்னிக்கவும் நாங்கள் அதைக் கவனிக்கவில்லை. தவறுக்கு மிகவும் வருந்துகிறோம், நாளையிலிருந்து வேறு வழியில் செல்வோம். என்றது யானைகளின் தலைவன். எலிகளும் மகிழ்ச்சியாக உணர்ந்தன.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு யானைகள் ஒருமுறை வேட்டையாடு பவர்களிடம் மாட்டிக்கொண்டது.. யானைகளை வேட்டைக்காரர்கள் கயிற்றால் கட்டினர். யானைகளை எடுத்துச் செல்ல வாகனம் கொண்டு வர ஊருக்குத் திரும்பிச் சென்றனர். இந்தச் செய்தி எலிக் குழுவின் தலைவரின் காதுக்கு எட்டியது. எலிகள் அனைத்தும் சென்று கயிற்றை அறுக்கத் தொடங்கின. மனிதர்கள் வருவதற்குள் யானைகள் தப்பிக்க எலிகள் உதவி செய்தன.

*நீதி : ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்.*



# பொறாமை கொண்ட காகம்



ஆ. ஆரோ ஜோஃப்ரினா

I "ஏ"



ஒரு மலையின் அருகே மான்கள் நிறைந்த, அழகிய மேய்ச்சல் நிலம் ஒன்று இருந்தது. அங்கிருந்த மரம் ஒன்றில் காகம் ஒன்று கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அது தினமும் அருகிலிருந்த மலையிலிருந்து கழுகு ஒன்று விரைவாக மேலும், கீழும் பறந்து சாகசம் செய்வதைப் பார்த்து வந்தது.

கழுகு ஒருநாள் கோழிக்குஞ்சு ஒன்றைக் காலால் பற்றிக்கொண்டு உயரே பறந்து செல்வதையும் வியப்போடு பார்த்தது. கழுகைப் பார்த்து பொறாமை கொண்ட காகம், கழுகு போல சாகசம் செய்ய எண்ணி உயர உயர பறந்து சென்று, திடீரென்று தலைகீழாகக் கீழ் நோக்கி இறங்கியது. காகம் தன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மின்னல் வேகத்தில் இறங்கி தரையில் மோதி தன் இறகையும், அலகையும் உடைத்துக் கொண்டது.

*நீதி : தன்னிலை உணர்ந்து செயல்படு*



# குரங்கும் மரத்துண்டும்



அ. எய்டன்

I "ஏ"



பிண்டு என்ற பெயர் கொண்ட குரங்கு ஒன்று மிகவும் குறும்புத்தனம் கொண்டது. எப்பொழுதும் விளையாட்டுத்தனமாகவே இருக்கும். எல்லோருக்கும் தொந்தரவுகள் கொடுக்கும் குணமுடையது.

ஒரு முறை பிண்டு குரங்கு கூட்டத்துடன் சேர்ந்து அங்குள்ள கிராமத்தைச் சுற்றி திரிந்து வந்தது. அங்கு ஓர் இடத்தில் கூட்டமாக சிலர் மரத்துண்டுகள் செய்யும் கருவியின் மூலம் பெரிய மரங்களை சிறிய சிறிய துண்டுகளாக்கும் வேலையில் மரங்களை பிளந்துகொண்டிருந்தனர். மரங்களை இரண்டாக வெட்டுவதற்குச் சிறிய துண்டு மரங்களை (ஆப்புகளை) உபயோகிப்பதைப் பார்த்த பிண்டு ஆச்சரியமடைந்தது.

அந்நேரத்தில் மதிய உணவிற்குச் செல்ல அறிவிப்பு மணி அடித்தது. உடனே வேலை செய்தவர்கள் வேலையை அப்படியே விட்டுவிட்டு உணவு உண்ண சென்றனர்.

பெரிய மரத்துண்டு பிளக்கப்பட்டு, அதனுள் வைக்கப்பட்ட ஆப்பு அப்படியே இருந்தது. இந்நேரத்தில் பிண்டு வந்து, பிளக்கப்பட்ட மரத்தின் மேல் ஓடியது. பகுதியாக பிளக்கப்பட்ட மரத்தினை முழுவதுமாக பிளக்க முயற்சித்தது. அதனால் முடியவில்லை. எனவே சொருகப்பட்டிருந்த ஆப்பை எடுக்க முயற்சித்தது. மரத்தின் குறுக்கே தான் இருந்ததை அது அறியவில்லை. மேலும் பிண்டுவின்வால் பாதிப்பிளந்திருந்த மரத்தின் உள்ளே இருந்தது. பிண்டு அந்த சிறிய மரத்துண்டை (ஆப்பு) எடுத்த வேளையில் பிளந்திருந்த மரம் ஒன்றாக சேர்ந்தது. பிண்டுவின் வால் உள்ளே சிக்கிக்கொண்டது. எவ்வளவோ முயற்சித்தும் வாலை எடுக்க முடியவில்லை. வால் அறுந்து பிண்டு மட்டும் வெளியே வந்தது. பிண்டு வாலில்லாக் குரங்கானது.

*நீதி : கவனக்குறைவு இழப்பை ஏற்படுத்தும்*



**லெ. நாகராஜேஸ்வரன்**

**VI "ஏ"**



# பெண்மானும் வேடனும்



ஒரு அடர்ந்த காட்டில் ஆண் மானும் பெண் மானும் வசித்து வந்தன. இரண்டும் மிகுந்த அன்போடு ஒன்றை ஒன்று அர்ப்பணித்து வாழ்ந்தன. ஒரு நாள் ஆண்மான் ஒரு வேடன் வைத்த பொறி வலையில் சிக்கிக் கொண்டது. அது தனது பெண் மானிடம் அருமை மானே! என் அருகே வராதே. நீயும் இந்த வலையில் சிக்கிக் கொள்வாய் எனக் கூறியது. இருந்த போதிலும் பெண்மான் ஆண்மானை விட்டு நீங்கவில்லை.

சிறிது நேரத்தில் வேடன் வந்து விட்டான். ஆண்மான் வலையில் சிக்கியிருக்க அருகில் பெண்மான் நிற்பதைக் கண்டு அவன் ஆச்சரியப் பட்டான். பெண்மான் கூறியது. வேடனே! நீ என்னைக் கொன்றுவிடு, எனது ஆண்மானை விட்டுவிடு எனக் கெஞ்சியது. உடனே ஆண்மான் இல்லை நீ முதலில் என்னைக்கொல் அவளை விட்டுவிடு என்றது. இருமான்களின் கோரிக்கைகளைக் கேட்ட வேடன், மான்களின் ஆழமான அன்பை எண்ணி வியந்தான். இரு மான்களையும் ஒன்றும் செய்யாமல் பொறியிலிருந்து விடுவித்தான். மான்கள் ஜோடியாக சந்தோஷத்தோடு ஓடிச் சென்றது.

*நீதி : உண்மையான அன்பு எப்போதும் வெற்றியடையும்.*

பா. பி. அக்ஷதா ஜெனெட்

I "ஏ"



# அழகான மீன்கள்

ஒரு ஏரியில் இரண்டு தங்க மீன்கள் வசித்து வந்தன. இரண்டும் தங்களது அழகைப்பற்றி பெருமை கொண்டிருந்தன. அடிக்கடி சண்டையிட்டு, உன்னைவிட நான்தான் அழகாக உள்ளேன், என ஒன்றை ஒன்று பேசியது. அன்று அவ்வாறு சண்டையிடும்போது ஆமை ஒன்று வந்தது. ஆமையிடம் இரண்டு தங்க மீன்களும் எங்களில் யார் மிகவும் அழகு? எனக் கேட்டது. உடனே ஆமை இரண்டு பேருமே நன்றாக உள்ளீர்கள். ஆனால் நான் இப்போது மிகவும் பசியாக உள்ளேன். உங்கள் இருவரையும் உண்ணப் போகிறேன் என்றது. இதைக் கேட்ட இரண்டு மீன்களும் தங்கள் தவறை உணர்ந்தன. வேகமாக நீந்தி சென்று தப்பித்தன.

*நீதி : ஒப்பிடுதல் தவறு.*

ரா. வ. ரதி

III "ஏ"



# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

ஒரு ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஐந்து மகன்கள் இருந்தனர். அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் எப்பொழுதும் சண்டை யிட்டுக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்துப் பெரியவருக்கு மிகுந்த மன உளைச்சலாக இருந்தது. இவர்கள் இப்படி இருந்தால் நமது காலத்திற்குப் பிறகு எப்படிப் பிழைக்கப் போகிறார்கள்? என எண்ணிய பெரியவர், மகன்களை அழைத்து ஐந்து பேரிடமும் ஆளுக்கொரு கம்பு கொடுத்து

ஒடிக்கச் செய்தார். அவர்களும் அதனை சுலபமாக ஒடித்து விட்டனர். அடுத்து நிறைய கம்புகளைச் சேர்த்துக் கட்டி அவர்களிடம் கொடுத்து இப்பொழுது ஒடித்துக் காட்டுங்கள், என்றார். ஒவ்வொருவராக அதை ஒடித்துப் பார்த்தனர், ஆனால் முடியவில்லை. அப்பொழுது பெரியவர், நீங்கள் ஒரு கம்பு கொடுத்ததும் அதைச் சுலபமாக ஒடித்துவிட்டீர்கள்; ஆனால் நிறைய கம்பு இருந்த கட்டை, உங்களால் ஒடிக்க முடியவில்லை. இதேபோல் தான் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமை இல்லாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் எதிரி உங்களைச் சுலபமாக வீழ்த்திவிடுவான். நீங்கள் ஒற்றுமையாகச் சேர்ந்து இருந்தால் உங்களை எவராலும் பிரிக்க முடியாது. எனவே அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று பெரியவர் அறிவுரை கூறினார்.

*நீதி : "ஒற்றுமையே பலம்".*





மெ. ஹர்ஷனா

VI "ஏ"




ஒரு நாள் பள்ளிக்கூடம் முடிந்த மாலை நேரம். நண்பர்களான ராமனும், மாதவனும் பேசிக்கொண்டே வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் செல்லும் வழியில், பணப்பை ஒன்றைக் கண்டனர். ராமன் ஓடிச் சென்று அப்பையை எடுத்தான். மாதவன் அதைத் திறந்து பார்த்தான். அதில் ஆயிரம் ரூபாய் இருப்பதைக் கண்டு, இருவரும் "ஆ" வென்று வாயைப் பிளந்தனர். உடனே ராமன், மாதவா! நாம் இந்தப் பணத்தில் தின்பண்டங்கள் வாங்கிச் சாப்பிடலாமா? எனக் கேட்டான். மாதவனுக்கு அச்செயல் தவறானது, என்று தோன்றியது. ராமா இப்பையை தொலைத்தவர் பாவம் இல்லையா! அவர் இதைத் தேடிக் கொண்டே வருவார். அவரிடம், இப்பையைக் கொடுத்துவிட்டு நாம் வீட்டிற்கு செல்லலாம், எனக் கூறினான்.

அப்போது ஒரு முதியவர் இந்தப் பையைத் தேடிக்கொண்டு அங்கே வந்தார். இருவரும் அப்பையை அவரிடம் ஒப்படைத்தனர். முதியவர் அவர்கள் இருவரின் நேர்மையை மனதார பாராட்டி, நன்றி கூறினார்.

*நீதி : "பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் நேர்மையாக வாழ வேண்டும்".*



# நாய்க்குட்டியும் எலும்புத் துண்டும்




பி. ஈவ்லின் ஃபியோனா

II "ஏ"




ரோஜர், ஒரு குறும்புக்கார நாய்க்குட்டி. எலும்புத் துண்டு அதுக்கு மிகவும் பிடித்த உணவு. ஒருநாள் சாலையில் நடந்துகொண்டிருக்கும் போது ஒரு சுவையான எலும்புத் துண்டு அதற்குக் கிடைத்தது. அந்த எலும்புத் துண்டை வாயில் கவ்விக் கொண்டு, இன்று எனக்கு நல்ல விருந்து, அப்படியென்று மகிழ்ச்சியாக வீட்டுக்கு வந்து கொண்டு இருந்தது. வரும் வழியில் ஒரு பாலத்தைக் கடக்கும் போது, கீழே தண்ணீரை எட்டிப் பார்த்தது. அங்கே ஒரு நாய் வாயில் எலும்புத் துண்டை வைத்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தது ரோஜருக்கு கொஞ்சம் பேராசை அதிகம். அந்த எலும்பும் தனக்கே வேண்டும் என்ற எண்ணம் தோன்ற எப்படியாவது அந்த நாயிடம் இருந்து அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்து வாயைத் திறந்தது. எலும்பு நழுவி தண்ணீருக்குள்ளே விழுந்தது. தண்ணீருக்குள்ளே தெரிவதும் தன்னுடைய பிம்பம் தான் என்று உணராமல் தன்னிடம் இருந்த ஒரு எலும்பையும் பறிகொடுத்து விட்டது.

*நீதி : இருப்பதில் நிறைவு கொள்வோம்.*





# குரங்கும், இரண்டு நண்பர்களும்

ர. பவின்
V "ஏ"



ஒரு காட்டில் கிளி, குரங்கு மற்றும் எலி ஆகிய மூன்றும் நண்பர்களாக வாழ்ந்துவந்தன. ஒருமுறை வேடன் ஒருவன் குரங்கை பிடிக்க எண்ணி, ஒரு கண்ணாடிக் குவளையினுள் சில பழத்துண்டுகளைப் போட்டான். தரையில் ஒரு முழு குச்சியை ஊன்றி, அதில் குவளையைச் சேர்த்து கட்டி, ஒரு மரத்தின் அடியில் வைத்திருந்தான். அம்மரத்தில் தாவி விளையாடிக்கொண்டிருந்த குரங்கின் கண்களில் அப்பழத் துண்டுகள் பட்டன. உடனே வேகமாக மரத்தின் கீழே இறங்கியது குரங்கு. இதனை கண்ட கிளி உன்னை பிடிக்கவே வேடன் அந்த குவளையை வைத்திருக்கிறான். அங்கே போகாதே, எனக் கூச்சலிட்டது. குரங்கோ வேகமாகச் சென்று குவளையை ஒரு கையில் எடுத்து மறுகையை அதன் உள்ளே நுழைத்து, பழங்களை அள்ளி எடுத்தது. கை நிறைய பழங்கள் இருந்ததால், குரங்கால் அக்கையை வெளியே எடுக்க முடியவில்லை. சில நிமிடங்களில் வேடன் வலையை வீச அதில் வசமாக அகப்பட்டுக் கொண்டது. குரங்கு கிளியையும் எலியையும் பார்த்து, தன்னை விடுவிக்கும் படி அழுதது. வேடனுக்குத் திடீரென தாகம் எடுத்தது. தன் முதுகில் வலையோடு தொங்கும் குரங்கை இறக்கி ஒரு மரத்தடியில் வைத்து விட்டு தண்ணீர் குடிக்க ஆற்றில் இறங்கினான். உடனே எலி, வேகமாக ஓடிச் சென்று வலையைக் கடித்து குதறியது. தன் கையில் இருந்த பழ துண்டுகளைக் குவளையினுள் போட்டுவிட்டுக் குவளையை உதறி எறிந்து விட்டு, அருகில் இருந்த மரத்தின் மீது ஏறி ஒளிந்துகொண்டது குரங்கு. திரும்பி வந்த வேடன் ஏமாந்து போனான். தன்னைக் காப்பாற்றிய தன் நண்பர்களுக்கு நன்றி கூறியது குரங்கு.

**நீதி : பேராசை பெருநஷ்டம்**



# குரங்கு போட்ட தொப்பி



ஹா. ஜுவான் ஆரவ்
II "ஏ"



ஒரு நாள் ஒரு தொப்பி வியாபாரி தொப்பி விற்றுக் கொண்டிருந்தார். அந்த வியாபாரிக்கு மிகவும் களைப்பாக இருந்ததால், தொப்பிக் கூடையை கீழே வைத்துவிட்டு, ஒரு மரத்தின் கீழ் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது மரத்தின் மேலிருந்த குரங்குகள் கீழே வந்து, தொப்பியை எடுத்து தலையில் வைத்துக்கொண்டது. சிறிது நேரம் கழித்து தொப்பி வியாபாரி எழுந்து பார்த்தபோது, அனைத்துத் தொப்பிகளையும் குரங்குகள் தன் தலையில் வைத்துக்கொண்டு மரத்தின் மேலே உட்கார்ந்துகொண்டிருந்தது. ஏய் குரங்குகளே, அதெல்லாம் என்னுடைய தொப்பிகள், திரும்ப கொடுத்து விடுங்கள், என்று கேட்டுக்கொண்டார் தொப்பி வியாபாரி. குரங்குகளும் திருப்பி கத்தியது. உடனே குரங்கு வியாபாரிக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர் தன் தலையில் இருந்த தொப்பியை எடுத்துக் கீழே வீசினார். அந்தக் குரங்குகளும் அதேபோல் செய்தது. தொப்பிகளை கூடைக்குள் சேகரித்துக்கொண்டு சந்தோஷமாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

*நீதி : ஆயுதங்களை விட புத்திசாலித்தனமே சிறந்தது.*



செ. ஆ. கிறிஸ்
I "ஏ"



# நரியும் சப்பாத்திக்கள்ளியும்



வேட்டை நாய்களுக்குப் பயந்து நரி ஓடி வந்துகொண்டிருந்தது. ஒரு வேலியைத் தாண்ட அது குதித்தது. வேலிக்கு அப்புறமுள்ள சப்பாத்திப் புதர்களில் போய் விழுந்தது. சப்பாத்தி முட்கள் அதன் கால்களைக் குத்திக் கிழித்துவிட்டன. கோபமடைந்த நரி கால்களை நக்கிக் கொண்டே சப்பாத்திப் புதரைச் சபித்தது.

சப்பாத்தி புதர் சொல்லியது, “கோபப்படாதே, எல்லையைத் தாண்டுபவர்களை தடுப்பதுதானே என் வேலை? என் மேல் கோபிக்கலாமா? என்றது.

நீதி : எல்லைக் கோட்டை தாண்டுவதால்
துன்பமே நேரும்

குழந்தை வளர்ப்பில் கதை சொல்லுதல் பேராயுதம். அது புதிய வாசல்களைத் திறக்கும். குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகள் ஒவ்வொன்றும் அவர்களின் கனவுகளுக்கான விதைகள். கற்பனைகள் வித விதமாகப் பிறக்கும். கதை ஒரு நெருக்கத்தை உருவாக்கும். ஒரு நம்பிக்கையைக் கொடுக்கும். குழந்தைகளே கதைகளாய் மாறிப்போவார்கள். புத்தக வாசிப்பு அப்போதே ஆரம்பித்துவிடும்.

Assisi Offset Press, Ngl., Cell : 7667729591